## இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் - 2014

இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் 2014 டிசெம்பர் 31 இல் முடிவுற்று உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2014 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிஅதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரசாங்க கைத்தொழில் சட்டக் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 2(1) உப பிரிவுகளின் பிரகாரமும் 1974 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய 124/6 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதிஅதிகாரச் சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் நிலையத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிரயாம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிசார் கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலும் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயபூர்வமான நிலைமையைத் தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை அரச பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

கீழே குறிப்பிடப்பட்ட இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது.

(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 1 க்கமைய அறிக்கையிடப்படும் திகதிக்கும் பின்னர் 12 மாதங்களுக்குள் தீர்த்து வைக்கப்படும் சொத்துக்கள் நடைமுறைச் சொத்துக்கள் எனவும் ஏனைய சகல சொத்துக்களும் நடைமுறையல்லா சொத்துக்கள் எனவும் நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட வேண்டுமாயினும், 01 - 15 ஆண்டுகளில் தீர்த்து வைக்கப்படும் நிலையத்தின் பதவியனியினருக்கு வழங்கப்பட்டுள்ள பதவியணியினர் கடனாகிய ரூபா 17,843,909 நடைமுறைச் சொத்தாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் என்பன மீள் மதிப்பீடு செய்யும் போது அச்சொத்துக்களுக்கு உரித்தாகும் ஆதனங்கள் பொறித்தொகுதி, உபகரண அணிகள் யாவும் முற்றாக மீளப் பெறுமதியிடப்பட வேண்டும். எனினும், நிலையத்தின் மோட்டார் வாகனங்கள், இயந்திரங்கள், பொறித்தொகுதி ஆகிய சொத்துக்கள் அணி முற்றாக மீள் மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கையை நிலையம் மேற்கொள்ளவில்லை.

(இ) இலங்கை அரச பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 க்கமைய, காசுப்பாய்ச்சல் கூற்றை தயாரிக்கும்போது காசாகப் பெறப்படும் கொடுக்கல் வாங்கல்களை மாத்திரம் கருத்திற்கொள்ள வேண்டுமெனினும். அதற்கு முரணாக, நிலையத்திற்கு அரசுடமிருந்து மானியமாகப் பெறப்பட்ட ரூபா 9,500,000 பெறுமதியான மோட்டார் வாகனம் பெறப்பட்ட காசாகக் கருதப்பட்டு செயற்பாட்டு நடவடிக்கைகளினாலான காசுப் பாய்ச்சலின் கீழும் நிலையான சொத்துக் கொள்வனவாக முதலீட்டு நடவடிக்கைகளின் கீழும் காட்டப்பட்டிருந்தது.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

கிழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) காசு மற்றும் காசுக்கு சமமானவை கீழ் காட்டப்பட வேண்டிய ஏழு நாள் வைப்பாகிய ரூபா 31,400,000 நடைமுறைச் சொத்துக்களின் கீழ் 3 மாதங்களுக்கு மேற்பட்ட வைப்பாக நிலையத்தால் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2010 ஆம் ஆண்டின் போது அரச நிறுவனங்களில் தற்காலிகமாக மேலதிக நிதியத்தில் வைப்பிலிடப்பட்டிருந்த ரூபா 8,994,089 வைப்புக்களுக்குரிய மீளாய்வாண்டு வரைக்குமான வட்டி ரூபா 2,139,720 வைப்புப் பெறுமதியுடன் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தது. எனினும், அது தொடர்ந்து பெற வேண்டிய வட்டியாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) C.N.C மிலிங் இயந்திரத்திற்கு துணைப்பாகங்களை பொருத்துவதற்கு ஏற்பட்ட மூலதனத் தன்மை வாய்ந்த செலவினமாகிய ரூபா 4,206,758 பழுதுபார்த்தல் செலவினமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) 2009 – 2011 காலப்பகுதியின் போது நிலையத்திற்குக் கிடைக்கப்பெற்ற 85 மாதிரி மின் விளக்குகளுக்கு மாதிரிப்பட்டியல் வழங்கப்படாது பரிசீலனை அறிக்கைகள் வழங்கப்பட்டமையால் பரீசீலனைக் கட்டணமாகிய ரூபா 525,506 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. குறித்த தொகையை மீளாய்வாண்டு முடிவிலேனும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

(உ) தேய்மானத்திற்கு உட்படுத்தப்பட முடியாத சொத்துக்களாக இனங்காணப்படக் கூடிய அருங்காட்சியகப் பொருட்கள் 15 சதவீதப்படி பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான தேய்மானம் ரூபா 65,261 ஆகவும் முன்னைய ஆண்டுகளது திரண்ட தேய்மானம் ரூபா 656,261 ஆகும்.

(ஊ) 2014 டிசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்றில் காணப்பட்ட ரூபா 1,071,929,562 நிலையான சொத்துக்களில் ரூபா 2,930,950 ஆன நுகர்வுப் பொருட்கள் ஆன உள்ளடங்கியிருந்தன.

### 2.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 17 வர்த்தக கடன்பட்டோர் கணக்குகளின் மீதிகள் ரூபா 2,936,827 ஆகவிருந்தது. இதில், 1 முதல் 3 ஆண்டுகளுக்கான கடன்பட்டோர் மீதி ரூபா 507,983 ஆகவும் 9 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன்பட்டோர் மீதி ரூபா 637,056 ஆகவும் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) வர்த்தகக் கடன்கொடுத்தோர் தொகையில் ரூபா 252,160 தொகை 06 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகவும் ரூபா 198,812 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகவும் தீர்த்து வைக்கப்படாதிருந்தன.

(இ) 2005 முதல் 2014 வரையான காலப்பகுதியின் போது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து நிலையத்திற்குக் கிடைக்க வேண்டிய பெறுமதி சேர் வரி ரூபா 29,316,666 தொகை நிறுத்தி வைத்த வரி ரூபா 239,092 தொகை என்பன மீளாய்வாண்டின் போதும் அறவிடப்படாதிருந்தன.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே குறிப்பிடப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 8 (ii) ஆம் பிரிவு 2004 ஜுன் 29 ஆந் திகதிய பீஈடீ 25 மற்றும் 2006 ஜுன் 27 ஆந் திகதிய பீஎவ்/பீஈ/9 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கைகள் | நிதி அமைச்சரினதும் குறித்த அமைச்சரினதும் அங்கீகாரமின்றி அரச வங்கி ஒன்றில் ஏழு நாள் வைப்பாக ரூபா 77,000,000 வைப்பிலிடப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2009 நவெம்பர் 13 ஆந் திகதிய 438(2) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | நிலையத்தின் நிலையான சொத்துக்கள் நேரடியாகப் பரீசீலிக்கப்பட்டு பொருட் பதிவேட்டின் பிரகாரமான மீதி, உள்ளவாறான மீதி மேலதிகம், குறைவு என்பனவற்றை உள்ளடக்கிய முழு அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், ரூபா 1,071,929,562 கிரயமுடைய நிலையான சொத்துக்கள் சம்பந்தமாக பொருட் பற்றாக் குறை மற்றும் இழப்பிற்குள்ளான கையிருப்பு என்பவற்றை உள்ளடக்கிய அறிக்கையே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. |
| (இ) | 2006 ஜனவரி 25 ஆந் திகதிய தேசிய பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.9.1 (அ) பிரிவு | திட்டமிடல் நிர்மாண மற்றும் ஆலோசனைச் சேவைப் பிரிவினது சீ.என்.சீ மிலிங் இயந்திரத்தைப் பழுதுபார்ப்பதற்கு உள்ளூர் கம்பனி ஒன்றிற்கு ரூபா 1,544,880 தொகையும் வெளிநாட்டுக் கம்பனி ஒன்றிற்கு ரூபா 2,661,878 தொகையும் மீளாய்வாண்டின் இறுதி வரையில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும், முறையான உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2010 செப்தெம்பர் 06 ஆந் திகதிய கொள்வனவுக் கைநூலின் பிரத்தியேகம் 19 இன் 9:3:1 ஆம் பிரிவு | உபகரணங்களினதும் மோட்டார் வாகனங்களினதும் பழுதுபார்த்தல் செலவினம் ரூபா 200,000 இற்கு நேரடி அமைச்சின் செயளாளரது அங்கீகாரம் பெறப்பட வேண்டும். எனினும், 2 வாகனங்களுக்குச் செலவிடப்பட்ட பழுதுபார்த்தல் தொகையான ரூபா 2,402,660 தொடர்பாக அவ்வாறான அங்கீகாரம் பெறப்படடிருக்கவில்லை. |

## 2.5 போதிய அதிகாரத்தால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தினது அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்ட பணிப்பாளர் சபையின் தீர்மானத்திற்கமைய மீளாய்வாண்டின் போது ரூபா 9,050,398 தொகையும் 2012, 2013 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 7,972,532 என ஊக்குவிப்புப் படி வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) 2014 பெப்ரவரி 11 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கைப் பிரகாரம் ஆராய்ச்சி ஆரம்பமாகிய தினத்திலிருந்து 6 மாதங்களுக்குள் அம் முன்மொழிவுகளுக்குரிய செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கேற்ப முன்னேற்றத்தை உள்ளடக்கிய இடைக்கால ஆராய்ச்சி அறிக்கை ஒன்று ஆராய்ச்சி முகாமைத்துவக் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டு ஆராய்ச்சிக்கான படியைப் பெறுவதற்கான அங்கீகாரம் பெறப்பட வேண்டும். எனினும், அவ்வாறான அங்கீகாரமின்றி 2014 ஜுலை முதல் 2015 ஏப்ரல் வரை நிலையத்தின் 03 உத்தியோகத்தர்களுக்கு ஆராய்ச்சிப் படியாக ரூபா 464,126 வழங்கப்பட்டிருந்தது.

(இ) ஏழு நாள் வைப்புக்களில் வைப்பிலிடப்பட்ட ரூபா 4,500,000 தொகையொன்று பதவியணியினர்களுக்கான கடனை வழங்குவதற்கு ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் இதன் பொருட்டுத் திறைசேரியின் அங்கீகாரம் பெறப்படவில்லை.

(ஈ) வணிக செயற்திட்ட இலாபத்தை பயன்படுத்தி நிலையத்தின் பொறியியலாளர்களுக்கு மோட்டார் வாகனங்களைப் பெறுவதற்காக ரூபா 1,000,000 கடனை 4.2 சதவீத வருடாந்த வட்டியுடன் வழங்குவதற்கான முன்மொழிதல் திறைசேரியின் அங்கீகாரமின்றி செயற்படுத்தப்பட்டிருந்தது. இவ்வாறு அங்கீகாரமின்றி 6 பொறியியலாளர்களுக்கு ரூபா 6,000,000 வழங்கப்பட்டிருந்தது. அரசாங்கத்தின் மோட்டார் வாகனத் தீர்வைச் சலுகையைப் பெற்றிருந்த 04 உத்தியோகத்தர்களும் இக்கடனைப் பெற்றிருந்தனர்.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதி கூற்றுக்களின் பிரகாரம், 2014 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிறுவகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளது நிதிசார் விளைவுகள் ரூபா 19,383,328 ஆனதுடன் இதற்கொப்பான முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 28,114,859 ஆகவும் இருப்பதால் நிதி விளைவுகளில் முன்னேற்றம் ரூபா 8,731,532 ஆகக் காணப்பட்டது. நிதிவிளைவுகளில் அதிகரிப்பிற்கான முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் ஏனைய வருமானம் 27 சதவீத அதிகரிப்பும் ஏனைய செயற்பாட்டு செலவினம் 56 சதவீதத்தால் குறைவடைந்தமை நிதிசார் விளைவுகளது முன்னேற்றத்திற்கான முக்கிய காரணிகளாக அமைந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயல நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செலவினத்திற்கான ரூபா 18,138,000 தொகை செலவிடுவதற்கு திட்டமிடப்பட்ட போதும், ஏற்பட்ட செலவினம் ரூபா 8,317,497 ஆகும். அது ஆண்டிற்கான செலவினத்தில் 3 சதவீதமாகும். அவ்வாறே, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செலவினம் 29 சதவீதம் குறைவடைந்திருந்தது. நிலையத்தின் அடிப்படை பணிகள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுதலே ஆயினும் கடந்த பல ஆண்டுகளாக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செலவினம் துரிதமாகச் குறைவடைந்திருந்ததுடன் மொத்தச் செலவினத்தில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குச் செலவிடப்பட்ட தொகை மிகச் சொற்பமே ஆகும்.

(ஆ) மீளாய்வாண்டின்போது பல்வேறு பிரிவுகளதும் செயலாற்றலை செயல் திட்டத்துடன் ஒப்பிட்டுப் பரிசீலிக்கையில் கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

i. திட்ட நிர்மாண மற்றும் ஆலோசனைச் சேவைப் பிரிவு மற்றும் அச்சுகளை நிர்மாணிப்பதற்கான 120 வேலைக் கட்டளைகள் மூலம் ரூபா 6,500,000 சம்பாதிப்பதற்குத் திட்டமிடப்பட்டபோதும், மீளாய்வாண்டின் இறுதியளவில் 48 சேவைகள் மேற்கொள்ளப்பட்டு ரூபா 1,561,000 வருமானமே பெறப்பட்டிருந்தது. இப் பிரிவில் பயன்படுத்தப்படும் சீஎன்சீ மிலிங் இயந்திரம் செயலற்றுப் போனமையால் வேலைகளுக்கான கட்டளைகள் கையேற்றல் வெகுவாகக் குறைந்திருந்தன.

ii. மேற்படி, பிரிவால் மீளாய்வாண்டின் போது சுயமாகச் செயற்படும் மாணிக்கக் கற்களை வெட்டுவதற்கான இயந்திரம் ஒன்றை நிர்மாணிப்பதற்கான செயற்திட்டத்தை அமுலாக்கத் திட்டமிட்ட போதும், செயற்திட்டம் ஆரம்பிக்கப்படவில்லை.

iii. கட்டிட நிர்மாண ஆலோசனைச் சேவைகளை வழங்குவதன் மூலம் ஆண்டின்போது ரூபா 3,300,000 வருமானத்தை ஈட்டுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும், ஆண்டின் இறுதியளவில் ஈட்டிய வருமானம் ரூபா 600,000 மட்டுமே.

iv. "Flap Gates" செயற்திட்டத்தின் மூலம் ரூபா 600,000 வருமானம் ஈட்டத் திட்டமிடப்பட்ட போதும், மீளாய்வாண்டின போது செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட வருமானம் கிடைக்கப்பெறவில்லை.

v. நிலையத்தின் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்ட குறைந்த செலவின நிர்மாண வேலைகளை அரச துறைகளுக்கான நிர்மாண வேலைகளுக்கும் அறிமுகஞ் செய்து வைக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்கள் எதிர்பார்த்த பெறுபேறுகளைப் பெறவில்லை. மீளாய்வாண்டின் போது ரூபா 1,000,000 வருமானத்தை ஈட்ட எதிர்பார்த்தபோதும், எதிர்பார்த்த வருமானம் கிடைக்கப் பெறாததுடன் ஏற்பட்ட செலவினம் ரூபா 619,051 ஆகவுமிருந்தது.

vi. மீளாய்வாண்டின் போது தகனக் கிரியை கூடமொன்றை நிர்மாணிக்கும் வணிக நோக்குடனான செயற்திட்டமாக அமுலாக்கி அதன் மூலம் ரூபா 5,500,000 வருமானத்தை ஈட்டுவதற்கு எதிர்பார்த்தபோதும், செயற்திட்டம் அமுலாக்கப்படாதலால் எதிர்பார்த்த வருமானத்தை கிடைத்திருக்கவில்லை.

vii. அம்பாந்தோட்டை மற்றும் புத்தளம் மாவட்டங்களில் நூலகக் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கான ஆலோசனைச் சேவைகளை வழங்குவதற்கு திட்டமிடப்பட்ட போதும், செயற்திட்டம் ஆரம்பிக்கப்படாதிருந்தது.

viii. மீளாய்வாண்டின் இறுதியளவில் தொழில்நுட்ப விற்பனைப் பிரிவு எதிர்பார்த்த இலக்கை எய்த முடியாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. விபரம் வருமாறு

| | **இலக்கு** | **உள்ளவாறான செயலாற்றல் (ITALITCS)** |
|---|---|---|
| i | தொழில்நுட்பப் பணிப் பொறுப்பை ஒப்படைப்பதற்கான 62 அனுமதிப்பத்திரங்களை வழங்குவதன் மூலம் ரூபா 732,000 வருமானத்தை ஈட்டுதல் | தொழில்நுட்பப் பணிப்பொறுப்பை ஒப்படைப்பதற்கான 21 அனுமதிப் பத்திரங்கள் மாத்திரமே வழங்கப்பட்டு ரூபா 139,000 வருமானம் ஈட்டப்பட்டிருந்தது. |
| ii | 17 ஆராய்ச்சிப் பிரசுரங்களை வெளியிடல் | 02 ஆராய்ச்சிப் பிரசுரங்கள் மாத்திரம் வெளியிடப்பட்டிருந்தன. |
| iii | புலமைச்சொத்து கொள்கையொன்றைத் தயாரித்தல் | 2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதும், மீளாய்வாண்டின் போது தயாரிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |

ix. நெர்ட் நிலையம் 22 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தி அதன் மூலம் ரூபா 1,900,000 வருமானத்தை ஈட்டுவதற்காக எதிர்பார்த்தபோதும், 14 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டு ரூபா 868,538 மாத்திரம் சம்பாதிக்கப்பட்டிருந்தது.

x. நெர்ட் நிலையத்தில் ISO 9001 முறைமைச் சான்றிதழ் நடைமுறையை அமுல்ப்படுத்துவதற்குத் திட்டமிட்டு 2011 முதல் 2014 ஆகஸ்ட் வரையிலுமான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அது உள்ளடக்கட்பட்ட போதும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

நீர்கொழும்பு நகர சபைக்கென கழிவறைத்திட்டம் ஒன்றை நிர்மணித்து அதனை நகர சபையிடம் நிலையம் ஒப்படைத்திருந்தது. எனினும், கழிவறைத் திட்டம் செயற்படாமையால் நெர்ட் நிலையத்திற்குச் செலுத்த வேண்டிய எஞ்சிய தொகையான ரூபா 2,128,636 ஐ வழங்குவதற்கு நகர சபை மறுத்திருந்தது. அத்தொகை மீளாய்வாண்டின் போது கணக்கில் பதிவழிக்கப்பட்டிருந்தது.

### 4.3 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) சேவை நாடுநர் நிறுவனங்களுக்கு அறிக்கைகளை வழங்குவதில் தாமதம் ஏற்படுதலால் கடந்த ஆண்டுகளில் பெறப்பட்ட வேலைகளுக்கான கட்டளைகளில் குறைவு ஏற்பட்டிருந்தது. இதனால் பட்டரிகளைப் பரிசோதிக்கும் வணிகச் செயற்திட்டத்தின் மூலம் பெறப்பட்ட வருமானம் துரிதமாக குறைவடைந்தவாறிருந்தது. மீளாய்வாண்டின்போது இச் செயற்திட்டத்தின் மூலம் பெறப்பட்ட வருமானம் ரூபா 14,918 ஆக இருந்ததுடன் இறக்குமதி செய்யப்படும் பட்டரிகளைப் பரிசோதிக்கும் ரூபா 11,949,980 க்குக் கொள்வனவு செய்யப்பட்ட பட்டரி டெஸ்டர் மற்றும் ஏனைய இயந்திரங்களும் உபகரணங்களும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டவாறிருந்தன.

(ஆ) 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 1,049,369 பெறுமதியான 83 மின் விளக்குகள் மாதிரிச் செவ்வைக்காக நிலையத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. எனினும், 2014 டிசெம்பரிலும் மாதிரிச் செவ்வை மேற்கொள்ளப்படாதிருந்தது.

(இ) நிலையத்தால் அமுல்ப்படுத்தப்பட்ட ரூபா 9,071,303 கூட்டுத்தொகைக் கிரயமுடைய 10 ஆராய்ச்சி செயற்திட்டங்களது ஆராய்ச்சி நடவடிக்கைகள் முடிவடைந்த போதும், மீளாய்வாண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்படாதிருந்தது.

(ஈ) நிலையத்திற்குச் சொந்தமான தொழில்நுட்ப பணிப்பொறுப்பு ஒப்படைப்பு மற்றும் அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2011 முதல் 2014 வரையான 5 ஆண்டுகாலப் பகுதியின்போது அறிமுகஞ் செய்து வைக்கப்பட்ட தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்ப உபகரணங்களது எண்ணிக்கை 19 ஆக இருந்ததுடன் 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் அறிமுகஞ் செய்து வைக்கப்பட்ட 03 தொழில்நுட்ப உபகரணங்களுக்கு மாத்திரமே தொழில்நுட்ப பணிப்பொறுப்பு ஒப்படைப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) நிலையம் அறிமுகஞ் செய்து வைத்த 49 வாகனங்களுக்குரிய பதிவு செய்யப்பட்ட அனுமதிப்பத்திரங்கள் 898 பேர் ஆக இருந்ததுடன் அதில் 83 பேர் மாத்திரமே 2014 ஆம் ஆண்டின் போது அனுமதிப்பத்திரங்களைப் பெற்றிருந்ததுடன் 30 தொழில்நுட்ப உபகரணங்களுக்காக அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொண்ட 299 அனுமதிப்பத்திரதாரர்கள் அனுமதிப்பத்திரங்களை முற்றாக கைவிட்டிருந்தனர்.

(iii) சிக்கனமாகக் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கெனத் தம்மை பதிவு செய்து கொண்ட 398 அனுமதிப்பத்திரதாரர்கள் 35 முற்புனைவுத் தொகுதியாளர்களும் 2005 க்கு முன்னர் பதிவு செய்து கொண்டவர்களாக இருந்ததுடன் தொழில்நுட்பம் காலங்கடந்து விட்டமையாலும் சமீபகாலத் தொழில் நுட்பத்திற்கேற்ப அவை நவீனமயப்படுத்தாததும் அனுமதிப்பத்திரதாரர்கள் தமது அனுமதிப் பத்திரங்களைப் புதுப்பிக்காது விட்டிருந்தனர்.

(உ) 2003 ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச் சொத்துக்கள் அதிகாரச்சட்டத்தின் XIV 83(2) பிரிவின் பிரகாரம், பேடன்ட் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட நாள் முதலாக இரண்டாவது ஆண்டு நிறைவில் அது நடைமுறைக்கு வருவதாயின், இரண்டாவது ஆண்டு மற்றும் பேடன்ட் அனுமதிப்பத்திரம் அமுலாக உள்ள ஒவ்வொரு இணை ஆண்டும் முடிவடையும் திகதிக்கு 12 மாதங்களுக்கு முன்னரே குறித்த அனுமதிப்பத்திரக் கட்டணத்தைச் செலுத்தி பேடன்ட் அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும். எவ்வாறாயினும், 2014 ஆம் ஆண்டு வரை 28 அனுமதிப்பத்திரங்கள் புதுப்பிக்கப்படாதிருந்ததுடன், புதிய தொழில்நுட்ப உபகரணங்களின் பொருட்டு பேடன்ட் உரிமையைப் பெறுவதற்கு 2002 ஆம் ஆண்டு தொடக்கம் 07 விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும், 2014 ஆம் ஆண்டு முடிவிலும் பேடன்ட் உரிமை வழங்கப்படாதிருந்தது.

### 4.4 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலையத்திற்குச் சொந்தமான தலைமைக் களஞ்சியத்தில் ரூபா 1,097,383 பெறுமதியான வழங்கப்படாதிருக்கும் 95 வகைப் கையிருப்புப் பொருட்களும் ரூபா 52,104 பெறுமதியான பழுதடைந்த 18 வகைப் பொருட்களும் 14 ஆண்டுகளுக்கு மேலாகக் குறைவாகப் பயன்படுத்தப்பட்டவாறிருந்தன.

(ஆ) நிலையத்தின் ஒவ்வொரு பிரிவுக்குமெனக் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 45,971,236 பெறுமதியான இயந்திரங்களும் உபகரணங்களும் 3-8 ஆண்டு காலமாகப் பயன்படுத்தப்படாதும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டவாறுமிருந்தன.

(இ) நிலையத்தின் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வீடு ஒன்றை நிர்மாணிக்கையில் உள்ளவாறு எவ்வளவு செலவாகின்றது என்பதைப் பரீசீலிக்கும் நோக்குடன் ரூபா 3,710,425 செலவில் 2013 ஆம் ஆண்டின் போது நிலையத்தின் தொழில்நுட்ப பூங்காவில் மாதிரி வீடு ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அவ்வீட்டைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 4.5 இனங்காணப்பட்ட இழப்புகள்

நிலையத்தினால் செயற்படுத்தப்பட்ட 2 வணிகச் செயற்திட்டங்கள் வருமானத்தினை விஞ்சி கூடிய செலவினம் மேற்கொள்ளப்பட்டதால் நிலையத்திற்கு ரூபா 609,726 இழப்பு ஏற்பட்டிருந்தது.

**4.6 ஒப்பந்த நிர்வாகம்**

பொலனறுவை பொது மருத்துவ மனையில் தாதிகளுக்கான விடுதிகளை நிர்மாணிக்கும் ஒப்பந்தம் சுகாதார அமைச்சினால் ரூபா 22,520,010 தொகைக்கு நிலையத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காணப்படுகின்றன.

(அ) 2011 மார்ச் 15 ஆந் திகதி ஆரம்பமாகி 2011 ஜுலை 15 ஆந் திகதியன்று முடிவடையவிருந்த நிர்மாண வேலை நடைவடிக்கைகள் 2013 பெப்ரவரி 02 ஆந் திகதியே முடிவடைந்திருந்தன.

(ஆ) நிலையமானது நிர்மாண வேலைக்கான மதிப்பீட்டில் மாற்றங்களைச் செய்து ரூபா 24,293,400 தொகையில் மதிப்பீட்டைத் தயாரித்து அதற்கமைய நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்ததுடன் இவ்வாறாக, மாற்றத்திற்குள்ளான மதிப்பீடு தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவால் அங்கீகரிக்கப்படாதலால் உடன்படிக்கைகளில் கைச்சாத்திட முடியாது போயிற்று,

(இ) 2013 ஜனவரி 18 ஆந் திகதிய ரூபா 29,450,947 இற்கான 07 ஆம் இலக்க விலைப்பட்டியல் சுகாதார அமைச்சுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் பொருட்டுப் பெறப்பட்ட தொகை ரூபா 20,274,560 ஆகும். சுகாதார அமைச்சிடமிருந்து ரூபா 9,176,386 அறவிடப்பட வேண்டிய போதும், 2015 ஜுன் 30 ஆந் திகதி கணக்காய்வு திகதி வரையிலும் அது அறவிடப்படாதிருந்ததுடன், இறுதி விலைப்பட்டியல்களைச் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதுமிருந்தது.

2014 பெப்ரவரி 02 ஆந் திகதியளவில் பராமரிப்புக் காலம் முடிவடைந்திருந்த போதும் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படாமையால் நிறுத்தி வைத்த ரூபா 1,214,670 தொகையை அறவிடப்பட முடியாதிருந்தது.

விலைப்பட்டியல் இலக்கம் 07 இன் பிரகாரம் மேலதிக வேலைகளுக்கு ரூபா 2,984,169 மற்றும் விலை வேறுபாடுகள் ரூபா 2,047,560 இன் ஆக இருந்ததுடன் அவற்றிற்கு அமைச்சின் அங்கீகாரம் பெறப்படவில்லை.

**4.7 தாமதமாகிய செயற்திட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) வாயு எரிபொருள் வெப்பக் கட்டுப்பாட்டுடனான பேக்கரி அடுப்பு ஒன்றை நிர்மாணிப்பதற்கான செயற்திட்டம்**

2012 ஜனவரி 09 ஆந் திகதி ஆரம்பமாகிய வாயு எரிபொருள் வெப்பக் கட்டுப்பாட்டுடனான பேக்கரி அடுப்பு ஒன்றை நிர்மாணிப்பதற்கான செயற்திட்டம் 2012 டிசெம்பர் 31 அன்று முடிவடைந்திருந்தது. மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 400,000 ஆகும். குறித்த காலப்பகுதியின்போது செயற்திட்டத்தை நிறைவு செய்ய முடியாது போயிருந்ததுடன் 2014 ஒக்டோபர் மாதமளவில் பல சந்தர்ப்பங்களில் மேலதிக நிதியேற்பாடாக ரூபா 6,366,000 அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அது ஆரம்ப மதிப்பீட்டின் 16 மடங்காகும். இச் செயற்திட்டம் 2014 ஒக்டோபர் 31 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும் 2014 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் ரூபா 3,496,796 செலவிடப்பட்ட நிலையில் செயற்திட்டம் இதுவரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) ரொபோ இயந்திரம் ஒன்றை நிர்மாணிக்கும் செயற்திட்டம்**

ரொபோ இயந்திரம் ஒன்றை நிர்மாணிக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டத்திற்கு மொறட்டுவை பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் ஈடுபட்டு மொறட்டுவை பல்கலைக்கழகத்திற்கு ரூபா 1,132,471

வழங்கப்பட்டிருந்தது. 2012 ஜனவரியில் ஆரம்பித்த இச் செயற்திட்டம் 2013 பூர்த்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும் 2013 டிசெம்பரில் செயற்திட்டம் முடிவடைந்திருந்தது. எனினும், எதிர்பார்த்தவாறு ரொபோ இயந்திரத்தைச் செயற்படுத்த முடியவில்லை

**4.8 செயலிழந்த செயற்திட்டங்கள்**

மீளாய்வாண்டில் ஆரம்பமாகி அவ்வாண்டிலேயே நிறைவு பெறவிருந்த ரூபா 6,785,000 கிரயத்துடனான 07 ஆராய்ச்சி செயற்திட்டங்களில் முன்னேற்றம் அவதானிக்கப்படவில்லை. இச் செயற்திட்டங்கள் குறித்த தினத்தில் நிறைவு பெறாமையால் செயற்திட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்ற முடியாது போனதுடன், சில செயற்திட்டங்களது கால எல்லை முடிவடைந்திருந்ததுடன் கால நீடிப்பு பெறப்படவுமில்லை

**4.9 பதவியணி நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முகாமைத்துவச் சேவைகள் திணைக்களம் அங்கீகரித்த பதவியணி 311 ஆகும். 2014 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் நிறைவேற்றுத் தர மற்றும் நிறைவேற்று தரம் அல்லாத பதவிகளில் நிலவிய வெற்றிடங்கள் 65 ஆகும். நிறைவேற்றுப் பதவிகளில் தரங்களில் நிலவிய மேலதிகம் 15 ஆகும்.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு புறம்பாக ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) ஆட்சேர்ப்பு நடைமுறைக்கமைய, ''பணிப்பாளர் (மனிதவள அபிவிருத்தி)'' பதவிக்குத் தேவையான அனுபவம் 15 ஆண்டுகள் ஆகும். எனினும், அவ்வாறால்லாத பெண் உத்தியோகத்தர் ஒருவர் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையில் உள்ளடக்கப்படாத'' ''முகாமையாளா (மனிதவளம்)'' ஆக 2014 ஆகஸ்ட் 01 முதல் 01 ஆண்டிற்கு ஆட்சேர்க்கப்பட்டிருந்தார்.

(ii) ''இயந்திரவியலாளர்'' பதவிக்கு ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு முரணாக ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவர் ஆட்சேர்க்கப்பட்டு 2014 மே தொடக்கம் மாதாந்தம் ரூபா 22,971 படியாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு முரணாக குறித்த துறையில் 1 ஆண்டு அனுபவம் அற்ற 5 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டு மாதாந்தப் படி மற்றும் சேமலாபப் படி என 2013 ஆம் ஆண்டின்போது ரூபா 170,626 மற்றும் மீளாய்வாண்டின் போது ரூபா 283,723 என வழங்கப்பட்டிருந்தது.

(iii) அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு மேலதிகமாக உத்தியோகத்தர் ஒருவர் ஒப்பந்த அடிப்படையில் 2014 ஜுன் 19 தொடக்கம் 01 ஆண்டு கால எல்லைக்கு ஆட்சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 167,358 படியாகவும் ஊழிய சேமலாபநிதியமாகவும் வழங்கப்பட்டிருந்தது.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது நிலையத்தின் தலைவரது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) செயற்திட்ட கிரயமும் முகாமைத்துவமும்
(ஆ) கடன்பட்டோர்
(இ) வாகனக் கட்டுப்பாடு